**கவனிக்க.**- *2019.05.24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2126 - 2019 මැයි මස 31 වැනි සිකුරාදා - 2019.05.31

*2126 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | 120 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 120 |


**கவனிக்க.**- (i) இலங்கை பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2019, மே மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) ஸ்ரம வாசனா நிதியம் (திருத்தம்) சட்டமூலம் 2019, மே மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2019, யூன் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூன் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

119- B 81527 - 353 (2019/05)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கம்/ப்ர/9955 ஆம் இலக்கத்தைக் கொண்ட அளிப்பு இல. 611 கஹடான, ஹேனேகம எனுமிடத்தில் வசிக்கும் அரங்கவெல்லே ராலலாகே முதுமெணிகா என்பவருக்கு 1988.04.07 ஆந் திகதி வழங்கப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இந்தப் பற்று நிலம் கம்பஹா மாவட்டப் பதிவாளரின் அலுவலகத்தில் இலக்கம் 10/326 ஆம் இலக்கத்தின் கீழ் 1990.03.29 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பற்று நிலத்திற்குச் சட்ட முறையிலான பின்னுரிமையாளர் இல்லை என்பதாலோ, அல்லது பின்னுரிமையாளர் இருந்தும், அவர் சட்ட முறையிலான பின்னுரித்து உரிமைக்கு விருப்பம் இல்லாமல் இருப்பதாலோ, பின்னுரிமையாளர் ஒருவரை நியமனம் செய்யவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், மேற்கு : மாகாண சபையின் மஹர பிரதேச செயலாளர் ஜீ.எஸ்.ஐ.விமலசேன ஆகிய நான், மேலே சொல்லப்பட்ட அளிப்புப் பத்திரத்தைக் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ், இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறேன் என்பதை இத்தால் அறியத்தருகிறேன். இந்த நடவடிக்கையை எதிர்த்து ஏதும் ஆட்சேபணை இருந்தால் அதை 2019.06.28 ஆந் திகதிக்கு முன்னதாக எனக்கு எழுத்து மூலம் அறியத்தருதல் வேண்டும்.

### அட்டவணை

கம்பஹா நிருவாக மாவட்டத்தின், மஹர பிரதேசச் செயலாளர் பிரிவின் 301ஏ கஹடான கிராம சேவை அலுவலரின் பகுதியில் உள்ள கிரில்லவல கிராமத்தில் அமைந்துள்ளதும், கம்பஹா மாவட்ட அளவையாளர் என அழைக்கப்படுவதும், நில அளவையாளர் நாயகம் அவர்களினால் தயாரிக்கப்பட்டு அளவையியல் அதிகார சபையின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள மு. பீ. கம் 1062 ஆம் இலக்க வரைபடத்தில் 59 ஆம் இலக்க துண்டு எனக் குறிப்பிடப்படுவதும் 0.086 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழ்வரும் எல்லைகளைக் கொண்டதுமான ரம்முதுகலவத்த அரச காணி.

வடக்கு : இலக்கம் 57 ;
கிழக்கு : இலக்கங்கள் 60, 61 மற்றும் 62 ;
தெற்கு : இலக்கங்கள் 60, மற்றும் 58;
மேற்கு : இலக்கம் 33.

ஜீ. எஸ். ஐ. விமலசேன,
பிரதேச செயலாளர்,
மஹர.

2019, பெப்புருவரி 20.

05- 928

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/15016.
பிரதிக் காணி ஆணையாளரின் இல. :- இடம்/பி/1/263.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கண்டி மாவட்டம், உடதும்பர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 843, ஹுன்னஸ்கிரிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஹுன்னஸ்கிரிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப்விபி 429 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 94 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 01 றூட் 18 விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திரு. எம். பி. பிரேமசந்திர என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : கண்டி மஹியங்கன வீதி ;
கிழக்கு : எப்விபி 429 இல் 93 ஆம் இலக்கக் காணியின் ஒரு பகுதி;
தெற்கு : எப்விபி 429 இல் 93 ஆம் இலக்கக் காணியின் ஒரு பகுதி;
மேற்கு : கலேகல வத்த.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம்) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 1995 ஆம் வருடத்திற்கான வர்த்தக பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப்பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்து ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 வீதத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% இன் மும்மடங்குத் தொகை தண்டப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 1999.09.10 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் குத்தகைக்கு விடுதல் அனுமதிக்கப்படமாட்டாது;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டி. ரி. எம். ஜயதிலக்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, மே 31.

5-841

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/16874.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. :- ப.ஒ.கொ/ගම්/06/61.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கம்பஹா மாவட்டம், மஹர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 249A, பஹல கரகஹமுன கிழக்கு, கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த P. P. Gam 3217 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.5180 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு பன் ஏசியா கலர்ட் யார்ன்ஸ் பிரைவட் லிமிடெட் என்னும் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : எல்கேனவத்த என்கிற குருந்துவத்தையில், K. P. ஹேமபால, சுசிரிபால மற்றும் H. திஸாநாயக ஆகியோர்களால் உரிமை கோரப்படுகின்றது;
கிழக்கு : P. P. Ko 4522 இன் காணித்துண்டு இலக்கம் 01;
தெற்கு : றாகம கடவத்த வீதி;
மேற்கு : வீதி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **முதல் குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2019.04.29 ஆந் திகதி தொடக்கம் முப்பது (30) வருடங்கள் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2019 ஆம் வருடத்திற்கான காணியின் விலை மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி மற்றும் தற்போதைய கட்டடத்தின் வருடாந்த பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில், பிரதான விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2019 ஆம் வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியில் 2% குத்தகை செயற்படுத்தப்படுகின்ற வருடத்திற்கான விலை மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி மற்றும் தற்போதைய கட்டடத்தின் வருடாந்த பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) மேற்பட்டு இருக்கும் சந்தர்ப்பத்தில், பிரதான விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்திற்கான சந்தைப் பெறுமதியில் 4% குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இந்த வருடாந்த குத்தகை ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும் என்பதுடன், திருத்தியமைக்கப்பட்ட வருடாந்த குத்தகைப்பணம், நேர்முன் கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் அறவிடப்பட்ட குத்தகைப் பணத்தில் 20% கூட்டி வருடாந்தக் குத்தகையாக அறவிடப்படும்.

*தவணைப்பணம்*.- அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2019.04.29 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகைக்கு அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்படமாட்டாது.

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. அயோத்யா எஸ். ஜயவர்த்தன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, மே 31.

5-929